# சாகாவரம் பெற்ற சான்றோன்



அமரர் **எம் சிவா**வின் நினைவு மலர்

**வெளியீடு**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை.
**2002**

320
SLPR

# தன்னேரில்லாத் தலைவன்!



24190

**20.07.1923 - 05.06.2002**

தமிழர் துயர்தீர்க்கத் தம்முயிரைத் தந்தே
தமிழர்நெஞ் சுள்ளுறைந்த தாதை - தமிழினத்தின்
தன்னே ரிலாத்தலைவன் சான்றோன் "சிவா" மக்கள்
மன்னன் மதிமிக்க மான்.

தமிழ்
நூலக

# முன்னுரை


வீ. ஏ. திருஞானசுந்தரம்
செயலாளர்,
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை.


1989 ஜூலை 13ல் மரணத்தின் வாசல்வரை சென்று மீண்டு வந்த எங்கள் "விக்னேஸ்வரா"வின் மாணாக்கர், பெரியார் மு. சிவசிதம்பரம் அவர்கள் (05.06.2002ல்) காலமானார் என்ற செய்தியைக் கேட்டபோது எங்களால் அதை நம்பமுடியவில்லை.

தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவந்த இப் பெரியார் சென்ற ஜனவரி மாதத்தில்தான் இலங்கை திரும்பினார். அவரின் வருகையை முன்னிட்டு எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினராகிய நாம் மிகுந்த பூரிப்புடன் 16.02.2002ல் விழாவெடுத்தோம். விழா எடுத்து நான்கு மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அந்தப் பெருமகனை இழந்துவிட்டோமே என்பதை நினைக்கும் போதெல்லாம் எம் நெஞ்சம் நெக்குருகும்.

எமக்கு ஏற்பட்ட வேதனை தரும் சம்பவம் மற்றொன்றும் உண்டு. எமது கிளைச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது என எமது செயற்குழு முடிவெடுத்துக் கொண்டது. இவ்விழாவை இரண்டு தினங்களில் நடாத்துவதென்பது எமது தீர்மானம். பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 20.07.2002ல் (அதாவது, இன்று) முதலாம் நாள் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆயத்தமானோம். விழாவிற்கு சிம்மக்குரலோனை விசேட அதிதியாக அழைப்பதற்கும் ஏற்பாடு. இத் திகதியே அவரின் பிறந்ததினமும் ஆகும்.

79 வயதினை அவர் எய்தவிருந்த நேரம். இறைவன் எழுதிய "விதி" வேறாக அமைந்துவிட்டது. வேதனைப்படுவதைத் தவிர வேறென்ன செய்வது?

எனினும், ஏதோ ஒரு வகையில் நாம் ஆறுதல் அடைந்து எம்மைத் தேற்றிக் கொள்கிறோம். அதாவது, நாம் பெப்ரவரியில் அன்னாருக்கு விழா எடுத்தோமே - அது எத்துணை தூரதிருஷ்டி மிக்க சம்பவமாக அமைந்துவிட்டது! அந்த விழாவே அவருக்குரிய பிரியாவிடை நிகழ்ச்சியாகவும் ஆகிவிடும் என்று நாம் அன்று எண்ணியிருந்தோமா?

நிகரற்றோனே! உங்கள் இழப்பை ஈடுசெய்ய முடியாது. ஒருமுறை மரணத்தை வென்ற நீங்கள் என்றென்றும் எமது நினைவில் இருப்பீர்கள். அதனால் நீங்கள் சாகாவரம் பெற்றுவிட்டீர்கள். கனத்த இதயத்தோடு கண்ணீரைக் காணிக்கையாக்கி, இச்சிறு பிரசுரத்தை வெளியிடுகிறோம். நீங்கள் படித்து ரசிக்க இதை உங்களுக்கு அனுப்பி வைக்க முடியவில்லையே என்று ஆதங்கமடைகிறோம்.

உங்கள் ஆசி மலர்கள் எம் "விக்னேஸ்வரா" மீதும், எம் மீதும் சொரியட்டும்!

* * * * * *



# A Major Loss to the Nation

*H.E. The President Chandrika Bandaranayake Kumaratunga*

A skilful advocate by profession, he entered politics in 1960 as a representative of the All Ceylon Tamil Congress for the Udupiddy electorate. He was the Deputy Speaker of Parliament from 1965-1970. After joining the TULF in 1977 he became its Deputy Leader. He was fortunate to escape assassination while his colleagues Mr. A. Amirthalingam and Mr. V. Yogeswaran were killed in the shooting incident on 13th July 1989.

I recall that in the mid - 80s when I visited Madras with my husband, Vijaya, we met Mr. Sivasithamparam and had discussions with members of five militant groups who were working towards a resolution of the ethnic strife in our country. Mr. Sivasithamparam was working very closely with us.

He was highly respected as a leader not only in Sri Lanka but also by Tamil-speaking people elsewhere. Our country has lost his valuable experience and the vision of a moderate leader of the Tamils at a critical juncture in its history.

❋ ❋ ❋ ❋ ❋ ❋

# That Past He Put Behind

*Hon. Prime Minister Ranil Wickremasinghe*

Mr. Sivasithamparam respected the traditions of Parliament and defended its members.

The career of the late Mr. Sivasithamparam is also the history of how the ethnic division turned into war and the tragedy which we face today.

As a member of the All Ceylon Tamil Congress he belived that all ethnic groups should have equal rights and opportunities within a united Sri Lanka. That is why he agreed with D. S. Senanayake when he introduced Article 29 into the Solbury Constitution to safeguard minority rights. The policy of D. S. in 1952 was endorsed by the Tamils in the North. In 1970 after his defeat at the hustings of TULF was formed. That is because the new Republican Constitution did not contain this Article which ultimately saw the demand for separatism. The late Sivasithamparam entered Parliament in 1977 with that view. We of course did not agree that separatism was a solution though accepting that the Tamils should be given more rights.

From the early 60s the issue were small and if we faced them at that time we would not have been confronting the present problem. Both parties have to share the blame. If the mundane issues were settled at that time the problem would not have reached the present magnitude. Events overtook us. We had the riots in 1983 and the TULF exited from Parliament. Thereafter the whole political landscape changed. Though



absent from Parliament they often met southern politicians to resolve the problem. If all of us worked together we would have prevented the slide.

Now we have an Memorandum of Understanding signed and the late Sivasithamparam played his role in that too. What we are doing now is implementing the Memorandum of Understanding. We are moving ahead. That is what we can do for Siva to keep the peace process on track. He was committed to a solution within a united Sri Lanka. He was one person whose house was burnt during the riots. That past he put behind. Likewise we too should put behind the past.

Though we did not see eye to eye always he had come to a stage where he accepted a political solution to end the conflict. Now we must pave the way for this political solution. The best tribute that could be paid to the late Mr. Sivasithamparam is for us to go ahead and start peace talks which would pave the way for justice to all.

# நெஞ்சை விட்டகலா நினைவுகள்

**வே. விமலராஜா**
**தலைவர்,**
**கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி,**
**பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை.**

மூத்த தலைவரும் மூதறிஞருமான நிகரற்ற பெரியவரான திரு. சிவசிதம்பரம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது மிகவும் கடினமானதாகும். எதை எழுதுவது எப்படி எழுதுவது எப்படி ஆரம்பிப்பது எப்படி முடித்து வைப்பது என்பது தெரியாது நான் திணறுகிறேன். ஏதோ எனது மனதில் தோன்றுவதை ஒன்றன் பின் ஒன்றாக வரைகிறேன்.

## ஆரம்பக் கல்வி

சிவா அண்ணா கரவெட்டியில் இராசவாசமுதலியார் (சித்தமணியம்) மகனான முருகேசு உடையாரின் ஏக புத்திரனாவார். இவரது தாய்வழிப் பேரன் இராசவாச முதலியார் சின்னத்தம்பி (பொன்னையா மணியம்). இவரது தந்தை வழிப் பேரன் தென்மராட்சி மணியம் தாய்வழிப் பேரன் வடமராட்சி மணியம். இவர் இராசகுடும்பத்தில் பிறந்தார். ஆனால் பிறந்த சில நாட்களில் தனது தாயை இழந்த துரதிர்ஷ்டசாலியாவார். இவரைத் தாய்வழிப் பேரனும் பேத்தியும் மிகமிக அன்பாக வளர்த்தனர். இவரால் தாயின் படத்தையாவது பார்ப்பதற்காக எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இவரது தந்தை வழிப்பேரனான சித்தமணியம் 1917ம் ஆண்டில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியை தாபித்தார். 1920ம் ஆண்டு இவரது தாய்வழிப் பேரனான பொன்னையா மணியம் விக்கினேஸ்வராக் கல்லூரியின் முகாமையாளராக பொறுப்பேற்றார். சிவா அண்ணா தனது தாய் வழிப் பேரனான சித்தமணியம் தாபித்த சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வியை



ஆரம்பித்து மூன்றாம் வகுப்பு வரை கற்று பின்பு விக்கினேஸ்வராக் கல்லூரியில் லண்டன் மற்றிக்குலேசன் வரை கற்றார். கேம்பிறிஜ் சீனியர், லண்டன் மற்றிக் என்ற இரு பரீட்சைகளிலும் முதன் முறையில் சித்தியெய்தியுள்ளார். விக்கினேஸ்வராக் கல்லூரியின் பாராளுமன்றத்தில் இவர் சபாநாயகராகவும் பிரதம மந்திரியாகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திகழ்ந்தார். இவரது இருவழிப் பேரன்மாரும் விக்னேஸ்வராக் கல்லூரியின் தாபகரும் முகாமையாளருமாக இருந்தபோதிலும் இவர் கல்லூரிப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தே பின்னர் வெற்றியீட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விக்கினேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்ற பின்பு கொழும்பு சென்ட் ஜோசப் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு சட்டக் கல்லூரியிலும் கல்விகற்று அப்புக்காத்துவாக 1947இல் சத்தியப் பிரமாணஞ் செய்தார். சட்டக்கல்லூரியில் தர்க்கப் போட்டிகளில் பங்கு பற்றி தங்கப் பதக்கங்களை தட்டியுள்ளார். இவர் ஒரு பிரபல குற்றவியல் வழக்கறிஞராவார். குட்டிமணி வழக்கு, துரையப்பா வழக்கு, குச்சவெளி கொள்ளை வழக்கு, இரத்மலானை குண்டுவெடிப்பு வழக்கு போன்ற பல பெரிய வழக்குகளில் இவர் ஆஜராகி வெற்றியீட்டினார். 1983ம் ஆண்டு இலங்கை யாப்பின் ஆறாவது திருத்தத்தை ஏற்காது எதிர்த்து சத்தியப்பிரமாணஞ் செய்யாததால் நீதிமன்றங்களில் ஆஜராக முடியாது வழக்கறிஞர் கடமையை புரியாது இருந்தார். கோடிக்கணக்கான வருமானத்தை இழந்தார். இது ஒரு பெரிய தியாகமாகும்.

## அரசியல்

இவர் 1956ம் ஆண்டு சுயேச்சை அங்கத்தவராய் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டார். இவரது வழிகாட்டியான கம்யூனிஸ்ற் பொன் கந்தையா வெற்றி பெற்றார். பங்குனி 1960ல் புதிதாக உருவாக்கப்பட்ட உடுப்பிட்டித் தொகுதியில் வெற்றி கண்டார். தமிழ் காங்கிரஸ் அங்கத்தவராக 1960ம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி கண்டார். 1960ம் ஆண்டு நடைபெற்ற இரு தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி அமோக வெற்றியீட்டிய போதிலும் இவர் காங்கிரஸ் அங்கத்தவராக தனித்து வெற்றி கண்டார். 1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவராக நல்லூர் தொகுதியில் போட்டியிட்டு இலங்கை முழுவதிலும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றவராகத் திகழ்ந்தார். இவர் பெற்ற அதிகப்படியான வாக்குகள் 28,137 ஆகும்.

## தியாகங்கள்

இவர் தமிழ் இனத்தின் நலனுக்காகவும், ஒற்றுமைக்காகவும் விட்டுக்கொடுத்தார். 1961ம் ஆண்டு கட்சி வேறுபாடுகளை மறந்து தமிழரசுக் கட்சியின் பாரிய சத்தியாக்கிரகத்தில் முக்கிய பங்கு எடுத்தார். சட்ட விரோதமாக தபால் விநியோகம் செய்தபோது தபால் பியோனாக இவர் மோட்டார் சைக்கிளில் போய் யாழ். தபால் அத்தியட்சருக்கு சட்டவிரோத தபால்சேவை தொடர்பான கடிதத்தை வழங்கினார். இவர் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். பேராசிரியர். சிவத்தம்பி கூறியது போன்று அரசியலுக்கு வந்தால் மற்றவர்கள் சொத்துகள் பல தலைமுறை தலைமுறைக்குச் சேர்ப்பார்கள். ஆனால், எங்கள் சிவா அண்ணாவோ தனது சொத்துக்களை-யெல்லாம் விற்றுத்தள்ளினார்.

## பாராளுமன்றத்தில்

சிவா அண்ணா பாராளுமன்றத்தில் 1965 -1970 வரை பிரதிச் சபாநாய-கராகக் கடமையாற்றி கலாநிதி என். எம். பெரேரா போன்றவர்களால் புகழப்பட்டார். இவர் தனது புகழுக்கு காரணமாய் அமைவது விக்கினேஸ்வராக் கல்லூரியில் கற்ற கல்வியே என மீண்டும் மீண்டும் கூறுவார்.

## இனக்கலவரத்தில் இழப்புகள்

இவர் ஒரு பண்பாளர், நேர்மையானவர். அரசியல்வாதி என்றால், தேவைக்கேற்ப நாடகமாடி ததிக்கிணதொம் போடும் திருகுதாளி. ஆனால் சிவா அண்ணாவோ ஓர் விதிவிலக்கு. ஆசையற்றவர், பதவிமோகமற்றவர், பெரிய ஞானி. 1983ம் ஆண்டு இனக்கலவரத்தில் இவரது மருதானை வீடு எரிக்கப்பட்டது மட்டுமல்ல இவரது கார்கள், பாரிய சொத்தான சட்டப் புத்தகங்கள் எல்லாம் தீக்கிரையாகின. இதற்கு நட்டஈடு கோரி எல்லோரும் விண்ணப்பித்தனர். இவரோ எதுவும் செய்யவில்லை. அரசாங்கம் நட்டஈடாக இவருக்கு அனுப்பிய பல இலட்சங்களுக்கான காசோலையைத் திருப்பி அனுப்பினார்.



## இறை வழிபாடு

இவர் மிகவும் இறை பக்தி உள்ளவர். தினமும் காலையும் மாலையும் குறைந்தது ஒரு மணி நேரமாவது இறைவழிபாட்டிற்காக ஒதுக்கி வைத்தார்.

## கல்லூரிக்குச் செய்த சேவை

இவர் எங்கள் கல்லூரியான விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தார். கட்டடம் கட்டிக் கொடுத்தார். மறைவதற்கு சில தினங்களுக்கு முன்பு பாடசாலை நூலகத்திற்கு ரூபா 7 1/2 லட்சம் பாராளுமன்றத்தால் தனக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து கொடுத்தார். இவரது மறைவு இன்றைய காலகட்டத்தில் தமிழினத்திற்கு பேரிழப்பாகும். எங்கள் கல்லூரியை பொறுத்தவரையில் இவரது மறைவு இமய மலை சரிந்தது போலாகும்.

இவர் மிக நல்லவர், தூய்மையானவர், பண்பாளர் என்பது இவரது இறுதி யாத்திரையிலிருந்து விளங்குகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார். பாராளுமன்றம் சென்றார். இவரது சிம்மக் குரலை எழுப்பினார். கர்ச்சித்தார். பிறந்த மண்ணான கரவெட்டியிலுள்ள சோனப்பு என்ற இடத்தில் இறுதிக் கிரியைகள் நடக்க வேண்டும் என விரும்பினார். அவரது இறுதி விருப்பு நிறைவேறியது. நல்லமுறையில் அவரது மரணச் சடங்குகள் அவர் விரும்பிய சோனப்புவில் நடந்தேறின.

இவர் இறந்து விட்டார். ஆனால், இவர் போல் யாருளர் என்ற கேள்விக்கு மறுமொழி இல்லையே. குணத்தால் பண்பால் நல்லவரும் பெரியவருமான ஆறடி உயர, அழகான தோற்றமுள்ள இவர் கட்டாயம் மோட்சத்திற்கு அழைக்கப்படுவார். மோட்சத்திலும் இவருக்கு ஒரு விசேட இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வோம்.

* * * * * *

# Kept his Word to Muslims

*Hon.Minister Rauff Hakeem*

Addressing the 12th convention of the SLMC held in Kalmunai, in 1994, it is learnt, Mr. Sivasithamparam had observed that as a Tamil he was ashamed of the treatment meted out to Muslims in Jaffna and had vowed that he would not go to Jaffna till the thousands of Muslims who were evicted from the city were resettled with dignity.

He had apparently kept his word and never stepped into the Northern capital for the rest of his life.

This magnanimous gesture will be treasured in the minds of all Sri Lankan Muslims irrespective of their party lines for years to come.

The late TULF leader was essentially a moderate politician who lived through the twists and turns of Northern politics.

He stood steadfastly and honestly by principles he professed and a person who strove his best to keep his neutrality even at times when Northern politics left little or no space for moderates.

In keeping with the tradition of moderate TULF leaders Mr. Sivasithamparam excelled in the legal field and was known as an eminent criminal lawyer. He was particularly praised for the astute handling of the famous "Avro" case where he presented a strong case for the defence.



Mr. Sivasithamparam had worked towards diffusing tension between the Tamils and Muslims in the North and East.

Mr. Sivasithamparam's political career which spanned for almost five decades ran parallel to the development of extremist politics in the North.

Yet he managed to steer clear of those trends and firmly held the belief that it would be through non-violent politics that peace and stability would return to the war weary North and the East.

At a time when a solid foundation has been laid to reach a negotiated settlement to the North East conflict, it is indeed sad to think that the late TULF leader will not be there to reap the fruits of a mission for which he committed his entire political career.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

# தலைநிமிர்த்தி வாழவைத்த தலைவன்

**ஜின்னாஹ்**

உடுப்பிட்டித் தொகுதியின்முன் நாளின் வேந்தன்
ஓங்குதமிழ்ச் சான்றோன்நல் ஆட்சி தன்னில்
கொடுமுடிதொட் டுயர்வுபெற்றுத் தனதாய்க் கொண்ட
கொள்கைமாறா மறத்தமிழன் கடமை வீரன்
அடுத்தவரும் "அரசியலின் தந்தை" என்றே
அகமேற்றுப் புகழ்ந்துரைகள் செய்தார்! ஐயா!
துடித்தழாத நெஞ்சமுண்டோ நினைப்பி ரிந்தோம்
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

அரசியலில் ஆணைபற்றுந் தொண்ட னாக
ஆணையிட்டு வழிநடந்துந் தலைவ னாக
சிரங் கொண்ட பணிவென்று தமிழர் வாழ்வின்
தனித்துவத்தை நிலைநாட்டுந் தீர னாக
அரைநூறு ஆண்டுகள்தன் உயிரின் மூச்சு
அடங்குவரை பாடுபட்டு நெஞ்சில் வாழும்
தருமத்தின் காவலனே நாவல் லோனே
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

தமிழனென்று நெஞ்சுயர்த்திச் சொல்ல வைத்தாய்
தலைநிமிர்த்தி வாழும்படி ஆணை யிட்டாய்
தமிழ்த்தலைவர் "**ஜீஜீ**" யொடு "**தந்தை செல்வா**"
தடம்பதித்த வழி சென்றாய்; தன்னே ரில்லாத்



தமிழ்த்தாயின் தலைமக்கள் வரிசை யில்லுன்
தனித்தவிடம் என்றென்றும் நிலைக்கும் ஐயா
தமிழரெனப் பிறப்பெடுத்தோர் உயிருள் வாழும்
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

இளந்தலைமைப் பொறுப்பின்று வேண்டும் என்றே
ஏற்றறுவழி விட்டதொடு இயைந்தே "அந்த"
இளந்தலைமை தனைத்தொடர்ந்து தொண்டுஞ் செய்ய
ஏற்றபெரு மனத்தைஎண்ணி வியக்கா ருண்டோ
இழந்துவிட்ட உரிமைகளைப் பெற்று எம்மோர்
இறைமைகாக்கத் தோள்கொடுக்கத் துணிந்தீர் ஐயா
தளர்ந்தாலும் உடல்நெஞ்சுத் துணிவுங் கொண்டீர்
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

பெரும்புகழோ டின்றுலகில் வாழும் பேர்கள்
பற்பலரைப் புடமிட்ட சொர்ண மாக
உருவாக்கும் பெரும்பேற்றைக் கொண்டு யாழின்
ஓங்குபுகழ் உலகறியச் செய்து நிற்கும்
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்விக் கூடம்
கட்டமையக் காரணரின் வழித்தோன் றல்நீ
சிரந்தாழ்த்திப் போற்றுந்தமிழ் உலகம் உன்னைச்
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

உடலழிந்து போனாலும் உம்பாற் கொண்ட
உளப்பற்று மாறாதே தமிழர் நெஞ்சில்
இடங்கொண்டோர் தமக்கிறப்பு இல்லை : நன்றி
என்றேனுங் கொண்டபழி ஏற்கா மேலோர்
திடமாக உம்மோடு உம்முன் னோரும்
தமிழ்த்தாய்க்கும் இனத்துக்கும் தோள்தந் தோரும்
சுடர்வார்கள் நெஞ்சத்துள் அழிவற் றோர்கள்
**சிவசிதம்ப ரம்**பெரியோய் தமிழர் கோனே.

✳ ✳ ✳ ✳ ✳ ✳

*கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை 16-02-2002 பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய வரவேற்பு விழாவில் மறைந்த தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள் நிகழ்த்திய உரையினை இங்கு தருகிறோம்.*

# இனப்பிரச்சினைக்கு இறுதி முடிவு எது?

"..... பத்து நாட்களுக்கு முன் விக்கினேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க சார்பிலே விழாவிற்கு வர வேண்டுமென்று அழைத்தார்கள். நான் கேட்டேன் என்ன சாதனை செய்ததற்காக இந்த விழா என்று. இரண்டு ஆண்டுகள் சுகமில்லாமல் சென்னையிலே இருந்ததற்காகவா அல்லது இந்த தேர்தலிலே கூடுதலான வாக்குகளை தமிழ் மக்கள் அளித்து பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதால் எனக்கு தேசிய பட்டியலில் இடம் தந்தமைக்காகவா என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள். இது எமது விருப்பம் நீங்கள் கட்டாயமாக வர வேண்டும் என்று. அந்த அன்புக் கட்டளையை மீறமுடியாமல்தான் இந்த விழாவிற்கு வந்திருக்கின்றேன். ஆனால் இந்த நாட்டிலே பாராட்டப்பட வேண்டியவர்கள் ஒரு சாரார் உள்ளனர். பதினெட்டு ஆண்டுகளாக காடுகளிலே இருந்து தங்கள் உயிரைப் பணயம் வைத்து தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிய அந்த வீர மக்களைப் பாராட்ட விழா எடுக்க வேண்டியது எமது கடமை. எனவே அவர்களுக்கும் அவர்களது தேசியத் தலைவருக்கும் எனது தலை சாய்ந்த வணக்கத்தையும் பெருமையையும் கூறிக்கொண்டு ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகின்றேன்.

இன்று பத்திரிகைகளிலே தினகரனாக இருந்தாலும் சரி வீரகேசரியாக இருந்தாலும் சரி தினக்குரலாக இருந்தாலும் சரி ஏதோ என்னைப் பற்றி எல்லாம் எழுதி இருந்தார்கள். அதற்கு என்மேல் உள்ள அன்புதான் காரணம். இன்று நான் மேடையிலே நின்று பேசுவதற்கு



விக்கினேஸ்வராக் கல்லூரி பல பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது. ஒன்று அங்கிருந்த இந்தியநாட்டு ஆசிரியர்கள் அச்சுதம் பிள்ளையாக இருந்தாலும் சரி, கோவிந்த பிள்ளையாக இருந்தாலும் சரி, இந்தக் கல்வியை ஊட்டினார்கள் என்பதை நான் என்றும் மறக்கமாட்டேன். அன்று இந்திய தேசியக் காங்கிரசினால் போராட்டம் நடந்த வேளையிலே அவர்கள் தான் எங்களுக்கு இந்த சுதந்திர உணர்ச்சியை உண்டாக்கினார்கள். அவர்கள் அன்று ஊட்டிய உணர்வு தான் என்மனதிலே பதிந்துள்ளது. இன்னுமொரு பாடம் நான் படித்தேன். நான் ஒரு பள்ளிக்கூட முகாமைக்காரரின் பேரன். நான் பள்ளிக்கூடம் சென்றால் அங்கு என்னை எல்லோரும் கனம் பண்ண வேண்டும் என்ற இறுமாப்பு என்னுள்ளே இருந்தது. ஆனால் முதல் நாளே பாடசாலை சென்றபோது திரு. வாசுதேவன் பிள்ளை அவர்கள் "Come here" என்று கூறி உறுக்கிய போது எனக்கு நடுக்கம் பிடித்தது. அப்போது எனது மமதை எல்லாம் போய் நானும் மற்றவர்களைப் போல் ஒருவன் தான் என்று உணர்ந்தேன். இப்படிப் பல பாடங்களை விக்கினேஸ்வராவிலே கற்றேன். அவற்றை எனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வந்துள்ளேன்.

நமது கல்லூரியிலே அப்போது ஒரு பாராளுமன்றம் அந்தப் பாராளுமன்றத்திலே நான் படித்த பாடங்கள் பல. அதில் ஒன்று சபைக்கு அக்கிராசனராக இருக்கும்போது நடுநிலைமையில் இருக்க வேண்டும் என்ற பாடத்தை அங்குதான் கற்றேன். நான் பல முறை பிரதிச் சபாநாயகராக இருந்தபோது எவ்வித பாராபட்சமும் இல்லாமல் அரசாங்கக் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி தீர்ப்புச் சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

நான் சுகயீனமாக இருந்தபோது எனக்கு யோசிப்பதற்கு நேரமிருந்தது. மிகவும் ஆறுதலாக யோசித்தேன். அப்பொழுது தான் இரண்டு உண்மைகளை உணர்ந்தேன். எமது மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு நாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி வழக்கறிஞராக இருந்தாலும் சரி வேறு யாராக இருந்தாலும் சரி நாம் செய்த முயற்சி எதுவுமே கைகூடவில்லை. நாம் ஏமாற்றப்பட்டோம். நான் வேதனையுடன் கூறுகிறேன். அது அமிர்தலிங்கம் தலைமையில் இருந்தாலும் சரி அல்லது அதற்குப் பின் வந்த தலைமையாக இருந்தாலும் சரி நாம் எந்த முடிவையும் காண முடியாமல் போய்விட்டது. மாறி மாறி ஏமாற்றப்பட்டோம். இன்று நமது பிரச்சினை உலகறிந்த பிரச்சினையாக இருக்குமென்றால், இன்று இந்த அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வர ஆயத்தமாக இருக்கிறதென்றால் அதற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அவர்கள் செய்த தியாகம் தான், அவர்கள் செய்த முயற்சிதான் இன்றைக்கு எம்மை இந்த அளவிற்கு கொண்டு வந்துள்ளது. எனவேதான் நான்கு கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை எடுத்தோம். அதாவது அரசு தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேசவேண்டும். வேறு எவரோடும் கதைத்து ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்ற தீர்மானத்தை மேற்கொண்டோம். அந்த முடிவைத்தான் நான் பாராளுமன்றத்தில் அன்று சொன்னேன். இன்றும் சொல்லுவேன். நமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றால் அது இந்த அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேசி எடுக்கும் முடிவுதான் சரியான இறுதியான முடிவாக இருக்கும் என்பதை நாம் வற்புறுத்திக் கூறுவோம். கூறிக்கொண்டே இருப்போம்.

ஓர் இந்திய ஊடகவியலாளர் அனித்தா பிரதாப் என்பவர் மிகவும் சிறந்த நூலை எழுதியுள்ளார். அவர் வன்னியிலே விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து மூன்று நான்கு மாதங்களாக இருந்து அவர்களுடைய செயற்பாடுகளை அவதானித்து இவ்வாறு கூறுகின்றார். "திரு. பிரபாகரன் போல் ஒரு தலைவரை நான் கண்டதில்லை" என்று. அவர் சொன்னால் அது சரியாக இருக்கும். ஏனென்றால் இந்தியாவில் மட்டுமல்ல ஆப்கானிஸ்தான், அயர்லாந்தில், வெவ்வேறு இடங்களில் எல்லாம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து எழுதியுள்ளவர் அவர். எனவே தான் நாம் ஒரே நோக்குடன் ஒரே செயற்பாட்டுடன் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதுதான் நாங்கள் செய்யக்கூடிய கடமை என்பதை உணரவேண்டும். நான் இனி எத்தனை ஆண்டுகள் வாழ்வேனோ தெரியாது. ஆனால் எனக்கு என்னுள்ளேயே ஒரு விதியை ஏற்படுத்திக் கொண்டேன். விடுதலைப் புலிகளும் திரு. பிரபாகரனும் எடுக்கும் முயற்சிக்கு நான் ஒரு பணிவான தொண்டனாக கடமையாற்றுவது தான் எனது கடமை என்பதை நான் உணர்ந்து செயற்பட எண்ணி இருக்கின்றேன். நான் பாராளுமன்றத்தில இருந்தாலும் சரி எங்கிருந்தாலும் சரி அவர்களுக்கு எப்படி ஆதரவு கொடுக்கமுடியுமோ அப்படியெல்லாம் கொடுப்பது என்று தீர்மானித்துள்ளேன்.

என்னை சிலர் கேட்கிறார்கள் நீங்கள் நடக்கமுடியாது Wheel Chair இல் பாராளுமன்றம் செல்கிறீர்கள் என்று. நானும் அப்படித்தான் நினைத்தேன். முதன் முதலாகத் தேசியப் பட்டியலில் எனது பெயர் உள்ளது என அறிந்தவுடன் நண்பர் ஆனந்த சங்கரிக்கு தொலைபேசி மூலம் சொன்னேன். "தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்" என்று. "நீங்கள் பெயரைப் போட்டுவிட்டீர்கள் உங்களுக்கு எந்த விதமான தொந்தரவும் தராமல் நான் இருக்கிறேன் பட்டியலில் வர நான் விரும்பவில்லை" என்று.



ஆனால் நல்லூரில் இருந்து நூற்றுக் கணக்கானவர்கள் எனது நண்பர்கள் எனது ஆதரவாளர்கள எல்லோரும் ஒரு செய்தியைத்தான் சொன்னார்கள். நாங்கள், அதாவது நல்லூர் வாக்காளர்கள் 77ம் ஆண்டு இலங்கையில் யாருக்கும் கிடைக்காத பெரும்பான்மை வாக்குகளால் உங்களை தெரிவு செய்தோம். மீண்டும் ஒருமுறை நீங்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும் என அவர்கள் வற்புறுத்திக் கேட்டார்கள். இனப்பிரச்சினைத் தொடர்பில் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டவர்களுள் இப்போது நானும் திரு. சம்பந்தனும்தான் இருக்கின்றோம். மற்றவர்கள் எல்லோரும் இறந்து விட்டார்கள். அது எந்தப் பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சர்வகட்சி மகாநாடாக இருந்தாலும் சரி திருமதி காந்தியுடன் நடாத்திய பேச்சு வார்த்தையாக இருந்தாலும் சரி சந்திரிக்கா அம்மையாருடன் நடந்த பேச்சு வார்த்தையாக இருந்தாலும் சரி நாங்கள் இருவரும் தான் கவனமாக கூடுதலாக பங்குபற்றினோம். இன்று இந்தப் பேச்சு வார்த்தை பற்றி எங்களுக்கு தெரிந்தவாறு வேறு எவருக்கும் தெரியாது. இந்த பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவைக் காணக்கூடிய இறுதிக்கட்டத்திலே நீங்கள் உங்கள் மக்களுக்கு உங்கள் அனுபவத்தை சொல்ல வேண்டும் என வற்புறுத்திக் கேட்டார்கள். இந்த இரண்டு காரணத்திற்காகத்தான் தள்ளாத வயதிலும் Wheel Chair இல் இருந்து கொண்டு பாராளுமன்றம் செல்கிறேன். இவ்வாறு அரசியல் நடாத்துவது இயலாத காரியம் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் ஜனாதிபதி ரூஸ் வெல்ட் அமெரிக்காவின் அதிபராக மூன்று தடவைகள் இருந்தவர். ஜேர்மன் யுத்தத்திலே பக்கபலமாக இருந்து யுத்தத்தை நடத்தியவர். அவரும் ஒரு Wheel Chair இல் தான் இருந்தவர். நான் ஒரு ரூஸ் வெல்ட் என்று கூறவில்லை. ஆனால், Wheel Chair இல் இருந்து தான் அவரும் அரசியல் செய்தவர் என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

அதேபோல் குருடர் ஒருவர் நிதி அமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி இருக்கிறார். அவர் பாராளுமன்றம் செல்வது நாயைப் பிடித்துக்கொண்டுதான். அவர் ஒரு கண் தெரியாதவர். பிறவிக் குருடு. பழக்கிய நாயைப் பிடித்துத்தான் பாராளுமன்றம் செல்வார். திறமையானவர். நான் எனது காலால் யோசிப்பது இல்லை. கண்ணால் யோசிப்பதும் இல்லை. மூளையால் தான் யோசிக்கிறேன். அந்த மூளைக்கு இன்னும் பிழை வரவில்லை என நினைக்கிறேன். எனவே என்னால் இயன்றதை நான் செய்வேன் என்று எனது அன்பு விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களுக்கு உறுதி கூறி விடை பெறுமுன் நான் பாராளுமன்றம் சென்ற முதல்நாளே எங்கள் பிள்ளைகளில் எத்தனையோ பேர் மறியலில்

வாடிக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பற்றியே பேசினேன். இன்றைக்கு ஓரளவு அவர்களுக்கு விடுதலை கிடைக்கும் என நினைக்கிறேன்.

நாங்கள் இல்லாது போகலாம். ஆனால் எம் கல்லூரி வாழ வேண்டும். இன்று இந்தக் கூட்டத்திலே விக்னேஸ்வராக் கல்லூரி மென் மேலும் ஓங்கி வளர்ந்து சிறப்பாக அந்த ஊர் மக்களுக்கும் மற்றவர்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்று ஆண்டவனை வேண்டி நாம் விக்னேஸ்வரக் கல்லூரி மாணவர்கள் என்று எல்லோரும் சுட்டிக்காட்டக் கூடியவாறு நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

☆ ☆ ☆ ☆ ☆ ☆

# விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் க. செல்வராஜாஅவர்களிடமிருந்து.........

விக்னேஸ்வர அன்னையின் மடியில் தவழ்ந்து தளிர் நடை பயின்று நிமிர்ந்த சாதனை படைத்த அமரர் சிவசிதம்பரம் அவர்களால் விக்னேஸ்வரா பெருமை அடைகிறது. விக்னேஸ்வராவின் சாதனைகளை சரித்திரமாக்கிய சிவசிதம்பரம் அவர்கள் ஸ்தாபகப் பரம்பரையைச் சேர்ந்தவர். அது மட்டுமல்ல - அன்னையின் பெருமையை அகிலமறியச் செய்த தவ மைந்தன்.

அவர் புகழ் இப்பாடசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பது உறுதி.

★ ★ ★ ★ ★ ★



# A Colourful Figure

*Hon. Minister W. J. M. Lokubandara*

The late Sivasithamparam was a colourful figure with a commanding presence who enlivened Parliament with his skilful oratory delivered in his stentorian voice. He had a command of all three languages and did not hesitate to display this in the House.

He worked tirelessly towards evolving a solution to the present problem. At a time when the whole country is clamouring for peace it is sad that we had to lose an experiencd politician like Mr. Sivasithamparam who made a significant contribution towards the peace process.

✳ ✳ ✳ ✳ ✳ ✳

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை, மு. சிவசிதம்பரம் அவர்களுக்கு ௨00௨ பெப்ரவரி 16இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அளித்த வரவேற்பின்போது ஆற்றப்பட்ட உரை.

# ஒரு பத்திரிகையாளன் பார்வையில்.....

**வீ. தனபாலசிங்கம்**
**செய்தி ஆசிரியர் 'தினக்குரல்'**

சிவா ஐயாவுக்கு நான் நிறையவே அறிமுகமானவனல்ல. ஆனால் அவருடைய வாழ்வின் கணிசமான காலகட்டத்தை அவதானிக்கும் வாய்ப்பைப் பெற்றவனாக நான் இருந்து வந்திருக்கின்றேன்.

இதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று நான் சிவா ஐயாவின் பிறந்த மண்ணைச் சேர்ந்தவன். இரண்டாவது, கடந்த இரு தசாப்தங்களாக நான் ஒரு பத்திரிகையாளனாக இருப்பதால், அரசியல் நிகழ்வுகளை அவதானிக்க வேண்டிய தொழில்சார் தேவையின் நிமித்தம், அவரின் செயற்பாடுகளை அறிந்தவனாக இருக்கின்றேன்.

1960களின் நடுப்பகுதியில் இருந்து நான் சிவா ஐயாவை அறிவேன். அவர் தேர்தல் பிரசாரங்களுக்காக எமது ஒழுங்கைக்குள் நடந்து சென்ற போது வெறுமனே அரைக்காற்சட்டையை மாத்திரம் அணிந்த ஒரு பையனாக அவரின் பரிவாரங்களின் பின்னால் இழுபட்டுச் சென்றிருக்கின்றேன். "சிவாவுக்கு ஜே" என்பது நான் நினைவு கூரும் இந்தக் கால கட்டத்தில் உடுப்பிட்டித் தொகுதியின் பல கிராமங்களில் என் வயதையொத்த சிறுவர்களுக்கு ஒரு வாய்ப்பாடு.



கரவெட்டியிலே சிவா ஐயா, ஒரு நீல, வெள்ளை ஹில்மன் காரில் வலம் வருவதை நான் பார்த்திருக்கின்றேன். அதில் சிவா ஐயா வருகின்ற சந்தர்ப்பங்களில் நாங்கள் "சிவாவுக்கு ஜே" என்று சோல்வோம். கிழமைக்கு ஒரு தடவை அவர் கரவெட்டிக்கு வந்து விட்டு கொழும்பு திரும்பினாலும், அந்த வெள்ளை நீலக் கார் எமது ஜேக்கு உரியதுதான். அக்காரில் ஒரு கர்ப்பிணியை ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றாலும், வீட்டுக்காரரை ஏற்றிகொண்டு கோயிலுக்குச் சென்றாலும் எங்களது "சிவாவுக்கு ஜே"யில் இருந்து அது தப்ப முடியாது. இதை நான் சொல்வதன் காரணம் வட மாராட்சியில் அன்று அதாவது நாங்கள் சிறுவர்களாக இருந்த போதிலும் கூட, சிவா ஐயா எம்மனதில் ஏற்படுத்திய தடம் எத்தகையது என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் தச்சன் தோப்புப் பிள்ளையார் கோவில் திருவிழாக்காலத்தில் சில சமயங்களில் சிவா ஐயா காரில் வராமல், தனது பெரிய தோட்டம் வீட்டில் இருந்தே நடந்து வருவார். அந்த நடையில் இருந்த கம்பீரத்தை ரசித்தவர்களை நான் அறிவேன். அழகான மாப்பிள்ளைகள் பற்றிப் பேசுவதானால் "அடியே அவன் சிவசிதம்பரம் மாதிரி"என்று கிழவிகள் பேசியதையும் நான் கேட்டிருக்கின்றேன். இவையெல்லாம் நாம் சிறுவர்களாக இருந்த காலத்து நினைவுகள். நீண்டகாலமாகத் தனது பிறந்த மண்ணான கரவெட்டிக்குச் செல்ல இயலாத சூழ்நிலையில் இருக்கும் சிவா ஐயாவுக்கு நான் கூறுகின்ற இந்த விடயங்களும், பழைய நினைவுகளும் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்துவதாக அமையுமானால், என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் உங்களை நான் கணிசமான காலமாகவே அவதானித்து வந்திருக்கின்றேன். 1977 இல் தமிழர் விடுதலை கூட்டணியின் தேர்தல் வெற்றி தொடக்கம் இன்று வரையான காலகட்டத்தில் உங்களது அரசியல் சோதனைகள், வேதனைகள் சகலதையும் கடந்து நீங்கள் ஒரு நீண்ட தூரம் வந்திருக்கிறீர்கள்.

உடல் நலம் குன்றிய நிலையில் தமிழகம் சென்ற நீங்கள் மீண்டும் கொழும்பு திரும்பி அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டுவீர்களா என்று சந்தேகித்தவர்கள் பலர். ஆனால், நீங்கள் மீண்டும் வந்திருக்கிறீர்கள் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறீர்கள்.

எமது தினக்குரல் பத்திரிகையின் பாராளுமன்றச் செய்தியாளர்களிடம் சிவாஜயாவின் பேச்சு இப்போது எப்படி இருக்கிறது என்று நான் வினாவுவேன். என்னதான் இருந்தாலும் குரல் கணீரென்று ஒலிக்கிறது என்று அவர்கள் சொல்வார்கள்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் எனக்கு ஒரு கவலையும் உண்டு. நானும் ஒரு ஐந்து வருடகாலம் பாராளுமன்றச் செய்தியாளராகப் பணியாற்றினேன். நீங்கள் பாராளுமன்றத்தில் பேசும்போது நான் உங்கள் பேச்சை செய்தியாகச் சேகரிக்க இயலவில்லை என்பதே அக்கவலை.

உங்களது அரசியல் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் உங்களை ஆதரிப்பதுவும் பாராட்டுவதும் இயல்பானதே. ஆனால், உங்களின் கோட்பாடுகளுடன் முரண்பாடான கருத்துக்களைக் கொண்ட இரு அரசியல் தலைவர்கள் உங்களைப் பற்றி வியந்துரைத்ததை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததைக் கூறுவதற்கு இச்சந்தர்ப்பத்தை விடப் பொருத்தமானதொன்று எனக்குக் கிடைக்குமென்று நான் கருதவில்லை.

1952ஆம் ஆண்டுக்கு முன்னர் நீங்கள் நெருங்கிப் பழகிய ஒரு இடதுசாரித் தலைவருடன் 1982க்குப் பின்னர் நான் நெருங்கிப் பழகியிருக்கின்றேன். அவர் இப்போது உயிருடன் இல்லை.

1989 ஜுலையில் கொழும்பில் உங்களது சகாக்கள் அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் நீங்கள் காயமடைந்தீர்கள்.

அமிர்தலிங்கத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த நீங்கள் போகவில்லையா என்று அந்த இடதுசாரித் தலைவரிடம் நான் நேரடியாகவே கேட்டேன். அவர் அதற்கு அளித்த பதில் : அது சிவசிதம்பரமாக இருந்தால் நிச்சயம் சென்றிருப்பேன் - இப்பதில் எனக்கு உங்கள் மீது அவர் வைத்திருந்த மரியாதையை உணர்த்தியதாகக் கருதுகின்றதே தவிர மற்றையவரின் மீது கொண்டிருந்த அரசியல் வெறுப்புணர்வையல்ல.

அடுத்தது, அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் உரைகள் நிகழ்த்தப்பட்ட தினம் முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் கொழும்புக்கு வெளியே சென்றிருந்தார். அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவி. அமிர்தலிங்கத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை



சபையில் எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்த திருமதி பண்டாரநாயக்கா அவசர அவசரமாகக் கொழும்பு திரும்பி, பாராளுமன்றத்திற்குள் ஓடிவந்து சபாநாயகரிடம் விசேட அனுமதி கேட்டு அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றுகையில் உங்களையும் அமரர் அமிர்தலிங்கத்தையும் பற்றிக் கூறிய வார்த்தைகள் எனது மனதில் பதிந்திருக்கின்றன.

தனது குடியுரிமையைப் பறிப்பதற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணையை எதிர்த்து நீங்களும் அமிர்தலிங்கமும் ஆற்றிய உரையைத் தன் வாழ்நாளில் என்றுமே மறக்கமாட்டேன் என்று திருமதி பண்டாரநாயக்கா அன்று சபையில் கூறியதை நான் செய்தியாளர் கலரியில் இருந்து நேரில் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்களைப் போன்ற சிறந்த பாராளுமன்றவாதிகள் இன்று இல்லையே என்றும் திருமதி பண்டாரநாயக்கா அன்று ஆதங்கப்பட்டதை நான் நேரில் பார்த்தேன்.

உங்களுக்குள்ள பெருமைகளையெல்லாம் முற்றிலும் நான் அறிந்தவன் அல்லன். அவற்றை முழுமையாக எடுத்தியம்பத் தகுதி உடையவனும் அல்ல. ஆனால், எனது வாழ்வில் எதிர்கொண்ட சில சம்பவங்களை மாத்திரமே நான் இங்கு கூறுகின்றேன். இவற்றையெல்லாம் கடந்து எத்தனையோ பெருமைகளை நீங்கள் கண்டிருக்கிறீர்கள், பெற்றிருக்கிறீர்கள்.

தமிழருடைய அரசியலில் உங்களுக்குத் தனியிடம் இருக்கிறது. அது பொதுவானது. ஆனால், எமது சொந்த ஊரான கரவெட்டியைப் பொறுத்தவரை எமது சின்னங்களில் நீங்கள் முக்கியமானவர். உங்களுக்குரிய பெருமைகள் தமக்குச் சொந்தமானவை என்று கரவெட்டி மக்கள் பெருமிதம் கொள்வார்கள். இலங்கையின் கடந்த கால நூற்றாண்டு கால அரசியலில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாகத் தமிழ் மக்கள் பட்ட அவலங்களுக்குள் நீங்கள் உங்களை அமிழ்த்திக் கொண்டீர்கள். சொந்த வாழ்வும், அரசியல் வாழ்வும் உங்களுக்கு ஒன்றாகிவிட்டன. உங்களுக்கு ஏற்பட்ட வேதனைமிகு அனுபவங்கள் எமக்கும் வேதனையைத் தந்தன.

நான் விக்கினேஸ்வரா கல்லூரியில் கல்வி கற்றவன் அல்ல. ஆனால், எந்தவொரு கரவெட்டியானுமே விக்கினேஸ்வராவின் பாதிப்பில் இருந்து விடுபட முடியாத அளவுக்கு அந்த நிறுவனம் பாரியது. வனப்புமிகு பாரம்பரியம் ஒன்றைக் கொண்ட உங்கள் குடும்பம் தான் கரவெட்டிக்கு

முதலில் கல்வி நிறுவனங்களை தந்தது. அதில் நீங்கள் என்றென்றைக்கும் பெருமை கொள்ளமுடியும்.

எமது நாட்டைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருக்கும் இன நெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காணும் நோக்கிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற தருணத்தில் சென்னையில் இருந்து மீண்டும் கொழும்பு வந்திருக்கிறீர்கள்.

தமிழ் இனத்தைப் பொறுத்தவரை மாத்திரமல்ல முழு இலங்கை மக்களைப் பொறுத்தவரையிலும் இது தீர்க்கமானதும், நெருக்கடியானதுமான காலகட்டம். அரசியல் முதிர்ச்சியும், தூர நோக்கும் கொண்ட அரசியல் வாதிகளின் பங்களிப்பு முன்னரை விடக் கூடுதலான அளவுக்குத் தேவைப்படும் இன்றைய தருணத்தில் எங்களுடன் நீங்கள் இருக்கிறீர்கள்.

இன்றைய சமாதான முயற்சிகள் இன நெருக்கடிக்கு ஓர் இணக்கத் தீர்வைக் கொண்டுவருமளவுக்கு முன்னேற்றம் காண காத்திரமான பங்களிப்பைச் செய்ய உங்களால் இயலுமாக இருந்தால் எம்மைவிடக் கூடுதலாக மகிழ்ச்சியடைவதற்கு யார் இருக்கிறார்கள்!

☆ ☆ ☆ ☆ ☆ ☆



# அரசியலில் நிகரற்ற தலைவர்

**கௌரவ அமைச்சர் பீ. சந்திரசேகரன்**

ஈழத் தமிழர்களின் சோக வரலாற்றில் தடம் பதித்து எஞ்சியிருக்கும் மூத்த தலைவர்களில் ஒருவரான மு. சிவசிதம்பரம் அவர்களின் வரலாறு வட, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் வரலாறோடு பின்னிப் பிணைந்தது.

தமிழ் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியதிலும், தமிழ் இளைஞர்களைத் தட்டி எழுப்பியதிலும்அன்னாரின் பணி அளப்பரியது. தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அரசியல் நிலைப்பாட்டினை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்வதில் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கு நிகராக பெரும் பங்கு ஆற்றியவர் என்ற பெருமையை இவர் பெறுகின்றார்.

தனது இறுதிக் காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வை தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்து, அரசியலில் வரட்டு கௌரவத்திற்கு இடமளிக்காமல் யதார்த்தமாக செயல்பட்டிருக்கின்றார்.

அரசியலில் நிகரற்ற பேரம் பேசும் சக்தியாக வளர்ந்திருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளோடு கரம் கோர்ப்பது தான் இன்றைய அரசியல் தேவையென உணர்ந்து நேர்மையோடும், தெளிவோடும் செயற்பட்டிருக்கின்றார். வட, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தீர்வு வேகமெடுத்திருக்கின்ற இக்கால கட்டத்தில் அன்னாரின் மறைவு பேரிழப்பாகும். இவரின் மறைவினால் எந்த இடைவெளியையும் ஏற்படுத்தி விடாமல் செயற்பட வேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய தலைவர்களின் பொறுப்பாக ஆகியுள்ளது.

✶ ✶ ✶ ✶ ✶ ✶

# மலையக மக்களின் மறக்க முடியாத் தலைவர்

கௌரவ அமைச்சர் ஆறுமகன் தொண்டமான்

அமரர் சிவசிதம்பரம் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அயராது உழைத்து வந்தவர். அவரின் மறைவு இந்நாட்டு மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரின் அரசியல் வாழ்க்கை முழுவதும் மக்களை சார்ந்ததாகவே இருந்தது. அன்று தொடக்கம் மக்களின் நம்பிக்கைக்கு உரியவராகவும், சிறந்த மக்கள் தலைவராகவும் செயல்பட்டார்.

இந்நாட்டில் ஏற்பட்ட 1983 ஆண்டு இனக் கலவரத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்தார். மீண்டும் 2002ம் ஆண்டு இலங்கைக்கு திரும்பிய அவர் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியல் உறுப்பினராக பதவி ஏற்றார்.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என அயராது உழைத்து வந்தார். வடக்கு கிழக்கு பிரச்சினைகள் சம்பந்தமாகவும், நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கும் அவர் உழைத்தார். அவர் வடக்கு கிழக்கு மக்களுடன் மட்டுமன்றி முஸ்லிம் மக்கள், மலையக இந்திய வம்சாவளி மக்கள் ஆகியோருக்காகவும் குரல் கொடுத்தார்.

மறைந்த அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். அந்தக் காலகட்டத்தில் அமரர் தொண்டமானும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே வடக்கு கிழக்கு மக்களுக்கு மட்டுமன்றி மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் குரல் கொடுத்த அமரர் சிவசிதம்பரத்தை அம் மக்கள் மறக்க மாட்டார்கள்."



# ஏட்டில் எழுத எளிதோ.....

ம. சிறீதரன் B. A
தொழில் நீதிமன்ற நீதிபதி
மேலதிக நீதவான், கொழும்பு.

வலி வடக்கு குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பினும் எமது குடும்பத்திற்கும் வடமராட்சிக்கும், குறிப்பாக கரவெட்டி கிராமத்திற்குமிடையே ஆன தொடர்பு மிகவும் பலம் வாய்ந்ததும் நாற்பதாண்டுகட்கு மேற்பட்டதுமாகும். இத்தொடர்பின் ஆரம்பகர்த்தா அமரர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் என்றே கூறுதல் வேண்டும். எனது தந்தையார் காலஞ்சென்ற திரு. சின்னையா - மனோரஞ்சிதன் அவர்களும் அமரர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் அறுபதுகளில் அரசியல் மூலம் ஒருவர்க்கொருவர் அறிமுகமானார்கள்.

இவ்வறிமுகம் பின்நாளில் இறுக்கமான நட்பாக மலர்ந்து உரிமையோடு உறவாடும் நண்பர்களாயினர். என் தந்தையார் 1971ம் ஆண்டு மறைந்த போது திரு. சிவசிதம்பரம் அவர்கள் அனுப்பிய அனுதாபச் செய்தியில் "கலை உலகம் ஒரு கலை உள்ளம் படைத்த ரசிகரை, குரும்பசிட்டி ஒரு நல்ல சமூக ஊழியனை, தமிழ்க் காங்கிரஸ் ஓர் அரசியல் தொண்டனை, நான் ஒரு அரிய நண்பனை இழந்து விட்டோம்"எனத் தெரிவித்திருந்தார். ஆயினும், இத் தொடர்பு என் தந்தையாரின் மறைவுடன் நின்று விடவில்லை. அமரர் சிவாவின் இறுதி நாட்கள் வரை தொடர்ந்தது. அவர் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்த என் தந்தையார் 1970ம் ஆண்டு கரவெட்டி அத்துளு அம்மன் ஆலயத்திற்கருகில் நடைபெற்ற அமரர் சிவா அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவில், தானே இயற்றி இசை அமைத்து என் சகோதரிகளினால் பாடப்பெற்ற பாடலில் அமரர் சிவா அவர்களின் சேவையை "ஏட்டில் எழுத எளிதோ எண்ணிப் பின் சந்ததி கண்ணீர் விடும்" எனப் பாடியிருந்தார்.

அப்பாடலினை மீண்டுமொரு முறை இம்மலரில் வெளியிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இராகம் : மாண்டு தாளம் : ஆதி

**பல்லவி**

சேவையில் யாரிணை யாரினிப்
பேரவைத் தலைமை தாங்கும் தமிழர்

**அனுபல்லவி**

போர் வெறிப் பார்வையிலே பார்புகழ் தமிழனையே
பறைத் தமிழா என்று வெறுத்தவர் அவைத் தலைமை தந்தனர் (சேவை)

**தொகையறா**

கண்ணியம் நேர்மை எண்ணிலாத் திறமை எல்லாமே உமதுடைமை
புண்ணிலே புழிப்போல் சுயநலக் காரர்கள் கண்ணிலே படும் எளிமை

**பாட்டு**

நாட்டுக்கு நலம் பலவே வீட்டுக்கு வீடு நன்னீர்
ஏட்டில் எழுத எளிதோ எண்ணிப் பின் சந்ததி கண்ணீர்விடும்

**தொகையறா**

உடுப்பிட்டி மறபட்டு விடப்பட்ட கிராமமாய்
மதிப்பின்றி இருந்த தொன்றே
உருப்பட்டு உம்முயற்சியால் படிப்படியாய்
மின்சார ஒளிபெற்ற பட்டினமின்றே

**பாட்டு**

மந்திகை அந்த நாளில் சொந்தமாம் அம்மை நோய்க்கு
இந்தப் பெயர் மாற்றியமைத்து எந்த ரோகத்திற்கும் டாக்டரை அமைத்தீர்



**தொகையறா**

வாசிக சாலைகள் திறம்பெற நடத்தவும் நெசவு ஆலைகள்
ஏழைகள் பிழைக்கவும்
கரைவலை செய்பவர் பணம்பெற் றுய்யவும் அவை தனில்
பேசியே பணிபல - புரிந்தீர்

**பாட்டு**

நாட்டுக் கழகாக நெல்லி மாக்கற்றை ஆக்கி வைத்தீர்
போக்கு வரத்துப் பஸ் சேவையை போகும் வழிக்கெல்லாம் நீரமைத்தீர்

**தொகையறா**

கட்சி பேதமின்றிச் சத்யாக் கிரகத்திலும் பக்க பலமாய் நின்றுழைத்தீர்
அஞ்சி ஓடினோர்க்கும் அடிபடாது உமது நெஞ்சைக் கொடுத்தே
தமிழனின் மானம் காத்தீர்

**பாட்டு**

வல்லவர் எல்லாத் தொகுதிக்கும் நல்லவரே
வல்வையில் சிவஞானம் மரணத்தின் போதங்கு நின்றவர்
நன்றாயுணருவர் (சேவை)

*(மனோரஞ்சித மலர் - 23.11.1971)*

✡ ✡ ✡ ✡ ✡ ✡

(அவர்) படிக்காத கடிதம்!

# சிவசிதம்பரம் அவர்களுக்கு,

இந்தியாவிலிருந்து வந்து போன் செய்கிறேன் என்ற உங்கள் சிவத்தம்பி எழுதிகிறேன்.

நீங்கள் எதிர்பார்த்தேயிராத, ஆனால், பெரிதும் விரும்பிய சூழலில் உங்கள் இறுதிப்பயணம் நடக்கிறது.

அண்ணா எனவா, சேர் எனவா, இரண்டுமே சொல்லியிருக்கிறேன். ஆனால், பெரும்பாலும் தோன்றா எழுவாய்தான்.

நீங்கள் விரும்பியபடியே நடக்கிறது. சோனப்புவில் எரிய வேண்டும். அந்த அத்துவான வெளியில், காலம் சிதைக்காத கம்பீரத்துடன் நிற்கும் ஆலமரங்களுக்கு கீழே அந்த மண்ணோடு, மண்ணின் துகளோடு வயல் வெளியிலிருந்து வரும் காற்றோடு.....

இந்த விருப்பம் கரவெட்டியில் பிறந்து அந்த மண்ணை நேசிக்கும் எல்லோருமே அடிமனதில் தேக்கி வைப்பதுதான்.

கொள்ளி வைத்து முடிய மௌனமாக நடந்து போய் முருகையன் கோவில் குளத்தில் தோய்ந்து குளித்துவிட்டு, இறந்தவரைப் பற்றிப் பேசிக்கொண்டே தத்தம் வீட்டுப் படலைகளைத் திறக்கின்ற அந்த பாரம்பரியம் இறந்த பின்னரும் கூட நாங்கள் தவறவிட விரும்பாத பாரம்பரியம்.

ஆனால், நீங்களொரு சராசரிக் கரவெட்டியானா? அப்படி நினைக்கவே மனம் கூசுகிறது. நீங்கள் கரவெட்டி வழியாக ஈழத்திற்கு, தமிழ் உலகிற்கு கிடைத்த ஒரு பெரும் சொத்து.



இந்த ஞாயிறு தமிழ் பேசும் உலகத்தின் கண்கள் சோனப்பை நோக்கி திரும்புகின்றன.....

நீங்கள் இந்த நாட்டின் தலைவர்களில் ஒருவர். தமிழ்த் தலைவர்களில் ஒருவர். கரவெட்டி செய்ததெல்லாம் உங்களைத் தயாரித்து உடுப்பிட்டிக்கு அளித்ததுதான்.

பின்னர் உடுப்பிட்டியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு உலகின் கவனத்தை ஈர்த்து தமிழ்க் குறைகள் பற்றிய குரலை எழுப்பி அந்தக் குரலோடு இலங்கையின் வரலாற்றில் நீங்கள் பதிவானீர்கள்.

கரவெட்டியின் இந்த அளிக்கை இலை மறைகாயான ஒன்றில்லையே...

கரவெட்டி சித்தமணியத்தின் (சிற்றம்பல முதலியார்) பேரன், முருகேசு உடையாரின் மகன், பொன்னையா மணியத்தின் தாய்வழிப் பேரன், இது ஒரு சிறிய 'பிதுரார்ஜிதம்' அல்ல.

நில மானியத்தின் காவலர்களாக இருக்கவேண்டிய உங்கள பேரனும் தந்தையாரும் காட்டிய நெகிழ்வுகள் மறக்கக்கூடியவை அல்ல. சித்தமணியம் இல்லாவிட்டால் தேவரையாளிச் சூரனுக்கு பாடசாலை கட்டுகிற துணிவே வந்திராது.

சாதி இறுக்கம் கொண்ட கரவெட்டியினூடே உடையாரின் நெஞ்சுரம் ஒரு மௌன சமூக புரட்சியை உருவாக்கியது.

தாராண்மை வாதம் உங்கள் இரத்தத்தில் ஓடியது. அதனால் தான் உங்கள் அரசியலின் ஆரம்பம் இடதுசாரித் தன்மையுடன் இருந்தது. அது வெறும் சம்பிரதாயமானதல்ல. சண்முகதாசன் ஒரு தடவை உங்களுக்கு ஆபத்து ஏற்பட்டபோது தனது இளம் தோழர்களுக்கு இதுபற்றி கூறியிருக்கிறார்.

தேர்தல் அரசியலில் எப்பொழுதுமே கொள்கை/ஆள்நிலை அசௌகரியங்கள் ஏற்படுவது வழக்கம். நீங்கள் கூட அதிலிருந்து தப்பவில்லை. ஆனால், காங்கிரஸிலிருந்த நீங்கள் தமிழர் கூட்டணி வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்ட பின்னர் மாறவேயில்லை.

1970-77 காலம் உங்களுக்கும், அமிர்தலிங்கத்திற்கும், தமிழ் இளைஞர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் நெருக்கடியான காலம், பாதி கொழும்பு, பாதி யாழ்ப்பாணம், பாதி மட்டக்களப்பு என்றிருந்த அரசியல்

தலைமை வடக்கு, கிழக்கின் மண்ணிற்கே வந்தது. இராஜதுரையின் பாதை சிக்கற்பட நீங்களும் அமிர்தலிங்கமும் சக தலைவர் ஆனீர்கள். அந்தக் கட்டத்தில் தான் உங்கள் அரசியல் தியாகங்கள் ஆரம்பமாயின.

தமிழ்த் தலைமையின் ஒருமைப்பாட்டிற்காக உங்கள் விட்டுக் கொடுப்புகள் அநேகம். பலர் இதை உங்கள பலவீனம் என்றார்கள். நன்கு தெரிந்தவர்கள் நேரிற்கூட சொன்னார்கள்.

பலவீனம் தான். தன்னை முனைப்புப்படுத்தாத பலவீனம். தமிழ் ஒருமையைக் காட்டிக் கொடுக்காத பலவீனம்.

உங்களிடம் ஒரு மகோன்னதம் இருந்தது. பொது அரங்குகளில் நியாயத்தை எடுத்துக் கூறுவதில் இணையற்ற சாதுரியமும் அதிர்வுறும் குரல் வளமும் கொண்ட நீங்கள், அரை வாக்கியங்களோடும், உதட்டுப் புன்னகை-யோடும் எத்தனை பேரை மன்னித்திருக்கிறீர்கள். எத்தனை பேருக்கு விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், தமிழர் ஒருமைக்கு ஒரு விட்டுக் கொடுப்பும் ஏற்படவில்லை. அதில மிக கவனமாக இருந்திருக்கிறீர்கள்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமையும்' உங்கள் ஆள்நிலை நாகரிகம் வார்த்தைகளுள் அடங்காது. வரலாறு மறக்காது.

நீங்கள் ஆசையில்லாதவர். எதிலும் மோகமில்லாதவர். அது ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்களுக்கென வைத்துக் கொண்டிருந்த காலை வழிபாட்டின் வழிவந்த மனத்திடம், மனத்திட்பம் என்றே கருதுகிறேன்.

பெருமை என்பது மற்றவர்களுக்கு இருந்ததுபோல், உங்களுக்கு நீங்களே காட்டிக்கொள்ள வேண்டியதொன்றாக இருக்கவில்லை. உங்கள் குடும்ப வழியால் வந்தது. சொல்லாண்மையால் வந்தது. தொழிற சிறப்பால் வந்தது. அது உங்களிடம் குடிகொண்டிருந்தது. நீங்கள்தான் அதை விரட்டி விரட்டிக் கொண்டிருந்தீர்கள்.

அரசியலுக்கு வந்தால் மற்றவர்களுக்கு சொத்து சுகம் சேரும். அவர்களும் சேர்ப்பார்கள். தலைமுறை தலைமுறைக்கு சேர்ப்பார்கள்.

ஆனால் உங்கள் அரசியலோ தலைமுறை தலைமுறையாய் இருந்த சொத்தை இழக்கச் செய்தது. உங்களுக்காக "ஜே" போட்டவர்களே உங்கள் காணிகளை அடாவிலைக்கு வாங்கியது எங்களுக்குத் தெரியும். கொழும்பு வீடு போனதும், அதை நீங்கள் மீளக் கட்டவும் விரும்பவில்லை. உண்மையில் கட்டவும் முடியவில்லை. இந்த நேர்மை கண்டு நாங்கள்



சிலிர்த்தோம். பலர் நம்பவேயில்லை. நீர் நிறைந்த தடாகம் போல சலன ஆர்ப்பரிப்புகள் எதுவுமில்லாமல் நீங்கள் சிரித்துக் கொண்டேயிருந்தீர்கள்.

இந்த வீரம் உங்களுக்கு எப்படி வந்தது? இந்தத் தன்மை உங்களிடம் எப்படி குடி கொண்டது? இந்த ஆசையின்மைகள் எங்கிருந்து ஊற்றெடுத்தன? நீதியின் இருப்பிற்காகவும், நியாயத்தின் விஸ்தரிப்பிற்காகவும் நீங்கள் கொடுத்த குரலில் கம்பீரம் எங்கிருந்து வந்ததோ அங்கிருந்துதான்இந்த பணிவுடைமையும் வந்தது.

அரசியல் எடுத்துரைப்பில் காட்டிய விவேகத்தினுள்ளேதான் இந்த பாரிய அவை அடக்கமும் இருந்தது.

உடுப்பிட்டி முதல் நல்லூர் வரையிலான பயணம் இருக்கிறதே. அது எழுதப்படும் போது தான் உங்கள் தியாக வரலாற்றின் உண்மைகள் வெளிவரும். இந்த ஊற்று - அது எங்களின் ஊரினுடையது.

"பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே" என்ற புறநானூற்று வரிகளை எங்கள் பெண்கள் "சித்திரையென்று சிறுப்பதுமில்லை, பங்குனியென்று பருப்பதுமில்லை" என்று சிந்தனைச் சம தர்மத்தையே உருவாக்கியுள்ளனர்.

"மரியாதை கேட்டுப் பெறப்படுவதில்லை. பார்த்துக் கொடுக்கப்-படுவது" என்ற தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்து போயுள்ள எங்கள் கிராமம் தன் ஊற்றை உங்களிடம் பகிர்ந்து கொண்டது.

எங்கள் பாடசாலைகள் இதை எங்களுக்குச் சொல்லித் தந்தன. கரவெட்டியின் பெரும்பாலான பாடசாலைகள் உங்கள் குடும்பத்தவர் சம்பந்தமில்லாமல் தொடங்கவுமில்லை, நடக்கவுமில்லை.

நீங்கள் அந்த மண்ணின் மகன், தச்சன் தோட்டத்து வீதியும், வெல்லனின் வாசலும் உங்கள் கால்களை எதிர்பார்க்கின்றன. விக்னேஸ்வராக் கல்லூரியின் கேற்றும், அதிபர் கந்தோரின் கதவும் உங்களை வரவேற்பதற்காகக் காத்துக் கிடக்கின்றன. பெரிய தோட்டத்து வீடு உங்கள் மேனியின் கமழ்வை கேட்கிறது.

ஓய்வில் நீங்கள் காட்டிய உயர்வுதான் உங்களை மேலும் உழைப்பிற்காக அழைத்தது. இந்த உழைப்பு பூர்த்தியாக வேண்டிய நேரத்தில் நீங்கள் மீண்டும் ஒதுங்கிக் கொண்டு விட்டீர்கள். இதுதான் உங்கள் முத்திரைப் பண்பு.

எந்த வெற்றியையும் நீங்கள் உங்களது என்று கோரியதில்லை. அதனால் தான் அண்மைக்காலத்தில் "நான் ஒரு தொண்டனே" என்று கூறினீர்கள்.

அண்ணா,

கரவெட்டி, தான் வெளியுலகிற்குத் தந்த மிகப் பெருமையான மனிதர்களுள் ஒருவரை மீண்டும் வரவேற்கிறது.

நீங்கள் வெறுங்காலுடன் நடந்த வீதிப் படலைகளைத் தாண்டி உங்கள் உடல் சோனப்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு அந்த அனலில் கலக்குகின்ற போது நாங்கள்.....

எனக்கு உண்மையில் தெரியவில்லை. எங்கள் சோகம் மிகப் பெரியது. அது உங்களை இழந்ததனால் மாத்திரமல்ல, உங்கள் பெருமையை சரிவர புரியாததினாலும் நெஞ்சு தலை தாழ்ந்து நிற்கிறது. உங்களைப் போற்ற வேண்டிய வகையிலே போற்றவில்லை என்பதாலும் நாங்கள் விக்கித்து நிற்கின்றோம்.

நாங்கள் எங்கள் கடமையைச் செய்யாமல் விட்ட வேளையில் கூட நீங்களோ இந்த மண்ணிலேயே கலக்க வேண்டுமென்கிறீர்கள். உங்களின் இந்த வருகை எங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு.

உங்கள் புகழ் - அது எங்கள் கிராமத்தின் நிரந்தர இருப்பாகிவிட்டது. நீங்கள் விளையாடிய தெருக்கள், படித்த பாடசாலை, நீங்கள் கையெடுத்த கோயில்கள் எல்லாம் உங்கள் பெயரைச் சொல்லும்; மறக்காமற் சொல்லும்; விடாமற் சொல்லும். இது சத்தியம்.

**அன்புடன் மிகுந்த**
**பாந்தவியத்துடன் உங்கள்**
**சிவத்தம்பி**

எல்லா வேளையிலும் அரசியல் வேற்றுமைகள் கூர்மையாக இருந்த காலங்களில் கூட புலமைப்பணியை நீங்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்திய உங்கள் சிவத்தம்பி. எங்கள் ஊரின் குரலாகவும்,

நாங்கள் படித்த பாடசாலையின் குரலாகவும்.

**நன்றி : ஞாயிறு தினக்குரல் 9.6.2002**



16-02-2002இல் எமது சங்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய வரவேற்புக் கூட்டத்தில் சின்னஞ்சிறுமி ஆற்றிய மழலைப் பேச்சு.

# Tribute from a Little one

Grand Uncle Siva, Uncles and Aunties Brothers and Sisters,

I am very happy to speak on this ceremony to welcome our Grand Uncle Siva.

You are all here today to wish and bless our Grand Uncle Siva. I asked my Grandpa why a ceremony only for Grand Uncle Siva. Grandpa said - Grand Uncle Siva is a grand man, great man a tall man, a Godly man and a big man. His Aunty Dr. Siva brought me to this world.

I love God. I am glad that I can go to God with the help of our Godly Grand Uncle Siva.

Our Godly Uncle is our Leader. He is dying for Peace to Sri Lanka. He is a man with a vision and mission.

He was not well and now he is well. He was shot and he escaped because he is God's good friend.

We wish him well and bless him. Let him live only hundred years!

**Lukme Buvendra Vimalarajah**

# A personal note

**C. Vivekananthan**
**Attoney - at - law.**

*It was in the year 1971. A wealthy businessman retained me in a case. He, on his own accord, paid me a sum of rupees one hundred for a call date. It was a big sum at that time. For the trail, he wanted to retain Mr. Sivasithamparam and wanted to know his fee. I was unaware anyhow, I told him that he might charge more than rupees three hundred. He was willing to pay upto rupees five hundred. we had a consultation with Mr. Sivasithamparam. During the course of the consultation, the client boasted of his wealth and indicated that he could pay rupees five hundred for a date. Mr. Sivasithamparam told very calmly that his fee for the consultation and for the date of trial was five guineas. When the client heard the words 'five guineas' he thought it was five hundred rupees and he was ready to pay. I told the client that the fee was rupees fifty - two and cents fifty.*

*The client was shaken : I was dismayed for my fee fell down relatively. That is 'Siva Annan'. His lofty mind and his humane approach did not permit him to mint money by his profession.*



# அவரே கூறிய சம்பவம்

1930ஆம் ஆண்டு ஆசிய ஜோதி பண்டித நேரு இலங்கைக்கு வந்தபோது நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறைக்குச் சென்றார். எமது கல்லூரி மாணவ, மாணவிகளும், பொதுமக்களும் நெல்லியடிச் சந்தியில் பெரியாருக்கு ஒரு வரவேற்பு கொடுத்தார்கள். கல்லூரி நாடாளுமன்றத்தின் சார்பில் அவரை வாழ்த்தி ஒரு மடல் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதன் கடைசி வாக்கியம் "We will not Falter" (நாங்கள் நிலை தவறோம்). வழக்கமான வசீகரப் புன்சிரிப்புடன் பெற்றுச் சென்றார். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார். ஆனால், தனது சுயசரிதத்தில் (Autobiography) இந்த நிகழ்ச்சியை விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார். கல்லூரியின் பெயர், வரவேற்பு நடந்த இடத்தின் பெயர் எல்லாம் மறந்து விட்டார். ஆனால், அந்தக் கடைசி வாக்கியம் "We will Not Falter" அவர் நினைவில் நிலைத்து நின்றது. அவரின் சுயசரிதையில் இந்த நிகழ்ச்சியை வாசிக்கும் பொழுது எப்பொழுதும் என் நெஞ்சம் பெருமையால் நிறையும்.

**எம். சிவசிதம்பரம்.**

# அவரே வழங்கிய தீர்ப்பு

1967இல் திருமதி பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். அவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு அரசாங்கக் கட்சிப் பிரதிநிதி, தங்கள் கட்சியின் அமைச்சரிடம் திருமதி பண்டாரநாயக்காவின் ஒரு மோட்டார் வாகனம் வாங்கிய விடயமாகக் கேள்வி கேட்டார். விளக்கமில்லாத ஒரு பதில் திருமதி பண்டாரநாயக்காவிற்கு சற்று பாதகமாக இருக்கும். கேள்வியும் பதிலும் என்ற முறையாகையால், திருமதி பண்டாரநாயக்காவுக்கு விளக்கம் கொடுக்க வசதியில்லை. இந்த விடயத்தை கேள்வி பதில் மூலம் எழுப்ப முடியாது என்று நான் கூறி கேள்வி கேட்க இடம் கொடுக்கவில்லை. தேவையெனின் தனிப்பட்ட பிரேரணை கொண்டு வரலாம் என்று தீர்ப்புச் சொன்னேன். பிரேரணை கொண்டு வந்தால் திருமதி பண்டாரநாயக்கா விளக்கம் கொடுக்கலாம். இது நியாயமான, நேர்மையான தீர்ப்பு என்று டாக்டர் என். எம். பெரேரா போன்றவர்கள் பாராட்டினார்கள்

**ம். சிவசிதம்பரம்**



# எங்கள் சிவா

வட மறவர் ஆட்சி நிலம் வடமராட்சிப் பிரிவில்
தொடரறமும் கல்வி நலம் சூழ்பதியாம் கரவெட்டி
பதினெட்டாம் நூற்றாண்டுப் பிற்பகுதி, இந் நிலத்தில்
அதிபதியாய் மணியகாரன் பெயரால் இருந்தவர் தான்
சித்தமணியப்பாவும் பொன்னையா மணியமுமாம்
தென்மராட்சிப் பிரிவு சித்தமணியப்பாவும்
இந் நிலத்தில் மற்றவரும் இருந்தரசு ஓச்சினரே
சித்த மணி அப்பாவின் தவமகனார் முருகேசு
உத்தமனார் உடையாராய் உயர் நிலையில் இருந்ததனால்
பொன்னையா மணியகாரன் புதல்வி சிவபாக்ய
நன் மணியை மணந்தறங்கள் நன்றாற்றிப் பெற்ற மகன்
சிவ சிதம்ப ரப் பெயராற் திசையெட்டும் புகழுற்றார்
தவ விக்னேஸ் வரா அவரின் தவக்கல்வி நிலையமென்பர்
சட்டத் துறையிலே தனிமுத்திரை பொறித்து
எட்டுத் திசையறிய இருந்திட்ட வேளையிலே
சிங்கப்பூர்ப் பொன்னப்பா பெற்ற தவச் சாரதா
தங்க மகள் தனை மணந்து தவ நெறியில் வாழ்ந்திருந்து
பொறியியலின் துறை புகுந்த சத்தியேந் திராவுடனே
அறிவரசி கலாநிதி நிராஞ்சலியும் அன்பு மக்கள்
எனப் பெற்றுப் பூரித்த எமதன்பர் சிவாவன்றோ
ஏராண்ட பெருமரபின் ஏற்ற மிகும் எங்கள் சிவா
பாராண்ட அவையத்துப் பா. உ. ஆய்ப் புகழ் பதித்தார்
ஆற்றல் தனைக் கண்டு உப சபா நாயகராய்
ஏற்றனர் நம் ஏந்தல் புகழ் உச்சியிலே நின்றார்

கற்பு நலக் கமலினியை காதல் மகன் துணைவியாய்
பற்பலர் சூழ் சபையிடத்து போற்றி இணைய வைத்தார்
பேராசான் தேவராஜ் பெரும் புலமைக் கலாநிதியை
ஆராத அன்புடனே மருமகனாய்க் கண்டாரே
மகன் வழியால் வந்ததினேஷ் மகள் வழியில் தயாபரனும்
சுகம் பெருக பேரர் எனத் தான் கண்டு பூரித்தார்
உடுப்பிட்டி நல்லூரில் உயர் பாராளு மன்றத்தின்
எடுப்பான எம்பி என இலங்கி நலம் புரிந்தார்
வெல்லனொடு, தச்சையமர் விநாயகனை நிலம் வீழ்ந்து
நல்லிதயம் பாகாக நிதம் கரையப் பணிந்ததுவும்
நல்லூரான், சன்னிதியான், அத்துளுவில் அம்பாளை
வல்லிபுரத் தாழ்வாரை வாயார, மனமார
வாழ்த்தியதும் வணங்கியதும் நித்ய நிகழ் வென்போமே
'தாளங்குழி முருகன் தன்னடியும் போற்றாதே
வாழும் வாழ் வதுவாழ்வோ' என்று வணங்கி நின்றார்
உடுப்பிட்டிச் சிங்கமிது உயர் மேடை ஏறி விட்டால்
தடுத்து நிறுத் திடமுடியாச் சிங்கநா தம் பொழியும்
பணிவன்பு இறைபக்தி பொழுதெல்லாம் தொண்டு மனம்
அணியென்று கொண்ட அந்த அன்புருவச் சிவா அரனார்
சீரடியைத் தேடி நடந் துயர் வுற்றார் ஆகையினாற்
பேரமைதி பெறுக வெனப் பரனடியைப் பரவுவமே.

**நன்றி : குடும்பத்தவர் வெளியிட்ட நினைவுமலர்**

*Kumaran Press (Pvt) Ltd., 201, Dam Street., Colombo -12. Tel: 421388*